தருவதா அல்லது வேறு இடம் தருவதா என்று யோசனையில் இருக்கிறது. இப்போது உள்ள இடம் போக்குவரத்துக்கு இடையூருக இருக்கிறது. எனவே ஒரு இடம் தேடிக்கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது. இதை பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு : பர்மா மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், பர்மா அகதிகளுக்குக் கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளை அமைத்து விவசாயத்தில் ஈடுபடச் செய்து உற்பத்தியை பெருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கூட்டுறவு பண்ணை வைத்து அதன் மூலமாகப் பலன் பெறுவதற்கான விழைவோடு வருவார்களானல், அதற்குத் தக்க ஏற்பாடு செய்யலாம்.

THIRUMATHI S. MANJUBHASHINI : The Hon. Minister said that it is difficult to get them removed from that place. But we find that more new stalls come up every day on either side of the Parry's Corner where roads are used by pedestrians. Would the Hon. Minister explain to us how he proposes to prevent new stalls from coming up when the existing ones are shifted to other places ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட பொது சங்கடம் வருகிறது. அப்படி வருகிறவர்களை எதிர்த்து அவர்கள் அங்கே வராத அளவுக்கு இருக்கிறவர்கள் தடுக்கிருர்கள் என்ற நிகழ்ச்சி நடக்கிறது. அதன் காரணமாக சங்கடம் ஏற்பட்டிருக்கிறதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு வழி கண்டுபிடித்து ஒதுப்புறமாக இடம் கண்டுபிடிக்குமாறு கமிஷனர் அவர்களை கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு இடம் வகுக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எஸ். ராஜமார்த்தாண்டம் : திருச்சியில் பர்மா அகதிகளுக்கு ஒரு காலனி கட்டிக்கொடுக்கப்பட்டது. அதில் பர்மா அகதிகள் இருந்தார்கள். ஆனல் இப்போது அங்கே அகதிகள் இல்லாமல் காலனி பூராவும் காலியாகக் குடிசைகளாக இருக்கின்றன. அவர்கள் என்ன ஆனர்கள் ? எங்கே போனர்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

Remuneration for Supervision Work for Teachers.

* 192.—*Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) whether the teachers of the former District Board High Schools are eligible for remuneration for their supervision work at the S.S.L.C. Public Examination ; and

(*b*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. இரா: நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cultivation of Paddy

* 193. *Q.*—THIRU WILSON APOLLOS (on behalf of Thiru M. SANKARALINGAM PILLAI) : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state

(*a*) the taluk-wise acreage of single crop paddy cultivation in Kanyakumari district ; and

7th March 1968]

(b) whether irrigation facilities are available from any reservoirs for these lands ?

நெற் பயிர்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வருடத்திற்கு ஒரு முறை பயிர் செய்யும் நெற் பயிர் நிலங்களின் பரப்பளவு தாலூகா வாரியாக எவ்வளவு?

(இ) இத்தகைய நிலங்களுக்கு நீர்த்தேக்கத் தண்ணீர் பாயும் வசதி யுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தோவாளை வட்டத்தில் 746·79 ஏக்கர் பரப்பில் ஒருபோக நெல் பயிரிடப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய வட்டங்களில் (ஒரு போக) நெல் பயிரிடப்படுவதில்லை.

(இ) இல்லை.

Bifurcation of districts and taluks

* 194. Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the districts and taluks that are proposed to be bifurcated into two parts ?

மாவட்டங்களும் தாலூக்காக்களும் இரண்டாகப் பிரித்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு–வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்கவேண்டுகிறேன் :

எந்தெந்த மாவட்டங்களும், தாலூகாக்களும் இரண்டாகப் பிரிக்கப் பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் எந்த மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை. ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலுள்ள தூத்துக்குடி துணை வட்டத்தை தூத்துக்குடியில் தலைமை யிடத்துடன் ஒரு முக்கிய வட்டமாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நாமக்கல் வட்டத்தை நாமக்கல், வேலூர் என்ற இருவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஒன்றினை சேலம் கலெக்டர் பணிந்தனுப்பி யுள்ளார். அவருடைய செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஏற்கெனவேயே பிரிக்கப்பட்ட பெரிய குளம் தாலூகாவில் 7 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அந்த ஏழு பஞ்சாயத்து யூனியன்களில் மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் பெரியகுளம் தாலூகாவிலும், நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் மற்ற தாலூகாவிலும் ஆக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பெரிய குளத்தில் சப்-தாலூகா இருந்தது. அதைச் சுற்றித்தான் தேனி மந்தைக்குப் போகிறவர்களும், உத்தமபாளையத்திற்கு போக வேண்டியவர் களும் போகவேண்டும். ஆகவே இதைத் திருத்தி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவைகளை எல்லாம் கலந்து தான் உத்தம பாளையம் தனித் தாலூகாவாக அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எத்திராஜுலு : தென்னாற்காடு ஜில்லாவை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று சர்க்காருக்கு ஏதாவது மனு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புதிதாக இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிளப்பியிருக்கிற கோரிக்கையாகும்.